பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி அதிகம் சொல்ல முடியவில்லை என்று சொன்னாலும் ஒன்றிரண்டை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள் கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு அமைச்சர் பெருமக்கள், குறிப்பாக மாண்புமிகு முதல்வரவர்கள் மக்களைக்கூடச் சந்திக்க மனமில்லாத நிலையில் இருக்கிறார்கள் என்பதற்கு ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். கடந்த 17-ஆம் நாள் மாண்புமிகு முதல்வரவர்கள் பட்டுக்கோட்டைக்கு வருகை தந்தார்கள். அப்பொழுது ஜனநாயக ரீதியில், அற வழியில் கறுப்புக் கொடி காட்டுவதற்காக நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டு இடமும் நிர்ணயித்து அதன்மூலம் கறுப்புக்கொடி காட்டுவதற்காக அங்கே தயாராக இருந்தோம். அங்கே மாண்புமிகு முதல்வரவர்கள் ஒரு மணி அளவிலே பக்கத்திலேயிருக்கும் ஓரத்தநாட்டு நிகழ்ச்சியிலே கலந்துகொண்டுவிட்டு 2 மணி, 3 மணிக்கெல்லாம் பட்டுக்கோட்டைக்கு வரவிருந்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ வர முடியாத நிலையில் இருந்துகொண்டார்கள். பல லாரிகளின் மூலமும், பல டிராக்டர்களின் மூலமும் 30, 32 லாரிகளின் மூலம் கையிலே மூட்டுக் கம்பு களையும், வேல் கம்புகளையும் கொண்டு வந்தார்கள். இன்னும் சுளுக்கிகளையும் கொண்டு வந்தார்கள், அரிவாள்களைக் கொண்டு வந்தார்கள். கற்களை லாரி களிலே ஏற்றிக் கொண்டு வந்தார்கள். நாங்கள் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலே நின்று கொண்டிருந்தபொழுது அந்த நண்பர்கள் ஈட்டிகளைத் தூக்கிக் காட்டினார்கள். அப்படிப்பட்ட அராஜகமான சூழ்நிலையில், கறுப்புக் கொடி காட்டுவதற்காக வந்த தோழர்கள் காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரையிலும் அமைதியாக, எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல், சுமார் 50,000-க்கும் மேற்பட்ட தோழர்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் அறந்தாங்கி பகுதி, திருத்துறைப்பூண்டி பகுதியாக வர வேண்டிய வழிகளைவிட்டு விட்டு ஓரத்தநாடு பகுதிக்குச் சென்று அங்கேயிருந்து ரௌடிக் கும்பல்களை, குறிப்பாக மதுரை மாவட்டத்திலிருந்து அவர்கள் வந்த வர்கள் என்று சொல்லப்படுகிறது, 200-க்கு மேற்பட்டவர்கள் தலையிலே ஐந்தாறு முழத் துண்டுகளை மூன்றுமுறை முறுக்கிக் கட்டிக்கொண்டு, ஏதோ அடை யாளம் காட்டுவதுபோல் அவ்வாறு செய்யப்பட்டு, அவர்கள் கலவரம் விளைவித் தார்கள். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தோழர்களும் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்ட காட்சியை நாம் அறிவோம். இப்படிப்பட்ட நிலைமைகளில் முதல்வரவர்களே அங்கே அராஜகத்தைத் தூண்டிவிடும் அளவிற்கு அங்கே கழகத்திலே உள்ள வர்களை லாரிகளில் அனுப்பி அதன்மூலம் கலகம் விளைவிக்கும் நிலைமையை உருவாக்கி, மண்டைகளை உடைத்து, கைகால்களை இழக்கின்ற அளவிற்கு கொடு